சுருக்கம்

பதிவுத்துறை – அறிவிப்புகள் – பதிவுத்துறையில் திங்கட்கிழமைதோறும் பதிவு குறை தீர்க்கும் முகாம் நடத்தப்படுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

வணிகவரி மற்றும் பதிவு(ஜே2)த் துறை

அரசாணை (நிலை) எண்.118

நாள் : 29.09.2021
பிலவ, புரட்டாசி – 13
திருவள்ளுவர் ஆண்டு – 2052

படிக்க:

பதிவுத்துறை தலைவரின் கடித எண்.33912/ஆர்3/2021, நாள் 14.09.2021.

*******

ஆணை:

06.09.2021 அன்று சட்டமன்ற பேரவையில் 2021–22–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை எண்.11, முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு துறையின் விவாதத்தின் போது மாண்புமிகு அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அவர்கள் ஏனையவற்றுடன் கீழ்கண்ட அறிவிப்பை வெளியிட்டார்கள்:–

"பதிவுத் துறையில் பொதுமக்களிடமிருந்து பதிவு தொடர்பான புகார்கள் அதிக எண்ணிக்கையில் பெறப்பட்டு வருகின்றன. சொத்து பதிவு தொடர்பான புகார்களை பொதுமக்கள் பெரும்பாலும் நேரடியாகவே அளிக்க விரும்புவதால், திங்கட்கிழமை தோறும் 'பதிவு குறை தீர்க்கும் முகாம்' நடத்தப்படும். ஒவ்வொரு மண்டலத்திலும் துணைப் பதிவுத்துறைத் தலைவராலும் ஒவ்வொரு பதிவு மாவட்டத்திலும் மாவட்டப் பதிவாளராலும் அவர்களது அலுவலகங்களில் வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் இம்முகாம் நடத்தப்படும்"

2. மேற்சொன்ன அறிவிப்பிற்கிணங்க, பதிவுத்துறைத் தலைவர் அவர்கள் மேலே படிக்கப்பட்ட தனது கடிதத்தில் பதிவுத்துறையில் பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சேவைகள் எளிதாகவும், வெளிப்படை தன்மையுடனும் அமைய ஏதுவாக பதிவுத்துறை தொடர்பான புகார்கள், குறைகள் மற்றும் கருத்துக்களைப் பொதுமக்கள் தெரிவிப்பதற்கு வசதியாக மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களால் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை ஒன்று 16.06.2021 அன்று துவங்கப்பட்டு பொதுமக்களுக்கு சீரியமுறையில்

சேவையாற்றி வருகிறது எனவும் இக்கட்டுப்பாட்டு அறைக்கு பொதுமக்களிடமிருந்து மின்னஞ்சல், தபால் மற்றும் தொலைபேசி மூலம் பதிவு தொடர்பான புகார்கள் நாளொன்றிற்க்கு நூற்றுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் பெறப்பட்டு வருகின்றன எனவும் இதன் மீது உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் தெரிவித்துள்ளார். மேலும், பதிவுத்துறைத்தலைவர் அலுவலகத்தில் தினமும் சராசரியாக 500 புகார் மனுக்கள் பெறப்படுகின்றன எனவும் இம்மனுக்கள் சம்மந்தப்பட்ட மாவட்டப் பதிவாளர் / துணைப் பதிவுத்துறைத் தலைவர்களுக்கு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பி வைக்கப்படுகின்றன எனவும் இதனால் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் வகையில் வாரந்தோறும் ஒருநாள் 'பதிவு குறை தீர்க்கும் முகாம்' நடத்தப்பட்டால் பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் எனவும், குறை தீர்க்கும் முகாம் திங்கட்கிழமைகளில் நடத்தப்பட்டால் பொதுமக்களுக்கு வசதியாக இருக்கும் என்பதாலும் மாநிலத்தில் உள்ள 9 பதிவு மண்டலங்களிலும், 50 பதிவு மாவட்டங்களிலும் மேற்குறிப்பிட்ட குறை தீர்க்கும் முகாம் நடத்தப்படலாம் எனவும் இதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பகுதி மக்களும் பயன் அடைவார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

3. பதிவுத்துறைத் தலைவரின் கருத்துருவினை கவனமாக பரிசீலனை செய்தபின், பதிவுத்துறைத்தலைவரின் கருத்துருவினை ஏற்று பதிவுத்துறையில் உள்ள 9 பதிவு மண்டலங்களிலும், 50 பதிவு மாவட்டங்களிலும் உரிய அலுவலகங்களில் வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் கீழ்கண்ட நெறிமுறைகளை பின்பற்றி 'பதிவு குறை தீர்க்கும் முகாம்' நடத்தப்படுவதற்கு பதிவுத்துறை தலைவருக்கு அனுமதியளித்து அரசு ஆணை வெளியிடுகிறது:–

1. திங்கட்கிழமைதோறும் காலை 10 மணி முதல் மதியம் 01 மணி வரை மக்கள் குறை தீர்க்கும் முகாம்கள் நடைபெற வேண்டும். 1 மணி வரை அலுவலகங்களில் மனுக்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.
2. மக்கள் குறை தீர்க்கும் முகாம்கள் தொடர்பான பதிவேடுகள் மற்றும் பதிவுக் குறிப்புகள் தெளிவாகவும் சீராகவும் பராமரிக்கப்பட வேண்டும். முதலில் உரிய முறையில் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்ட பின்னரே மனுக்களை பெற்று கோரிக்கை மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
3. விசாரணை செய்ய வேண்டிய புகார் மனுக்கள் மீது 15 நாட்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. உடனடியாக தீர்வு காண வேண்டிய மனுக்கள் மீது 2 நாட்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
5. போலி ஆவணப் பதிவுத் தொடர்பான புகாராக இருப்பின் சட்டபூர்வ காலக்கெடுக்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

VerifiedRealEstate™

6. பதிவேடுகள் மற்றும் பதிவு புகார்கள் அதிகம் வரும் அலுவலகங்களை துணைப் பதிவுத்துறைத் தலைவர் ஆய்வு செய்திட வேண்டும்.
7. மக்கள் குறை தீர்க்கும் முகாம்கள் குறித்து பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் அனைத்து பதிவுத்துறை அலுவலகங்களிலும் அறிவிப்பு பலகை வைக்க வேண்டும்.
8. திங்கட்கிழமை தோறும் குறை தீர்க்கும் முகாம் நடத்தப்படுவதை செய்தி குறிப்புரையாக, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை (Directorate of Information and Public Relations) மூலம் அறிவிக்க வேண்டும்.
9. மாதம்தோறும் துணைப் பதிவுத்துறைத் தலைவர் குறை தீர்க்கும் மனுக்கள் மீதான நடவடிக்கை குறித்து பதிவுத்துறைத் தலைவர் அலுவலகத்திற்கு அறிக்கை அனுப்ப வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா. ஜோதி நிர்மலாசாமி
அரசு செயலாளர்

பெறுநர்
பதிவுத்துறைத் தலைவர், சென்னை – 28.
சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை, சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர், வணிகவரி மற்றும் பதிவு அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
வணிகவரி மற்றும் பதிவு(யு)த் துறை, சென்னை – 9.
அரசு செயலரின் தனிச் செயலர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி..

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

Verified RealEstate™

Verified RealEstate™